[1987 ஏப்ரல் 21

(இ) தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களைச் சேர்க்க நன்கொடைகள் வசூலித்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. எஸ். இராசாராமன், டாக்டர் க. நல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எஸ். இராசாராமன்: துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் நன்கொடைகள் வாங்குவதால் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் பொதுமக்கள் தங்கள் செல்வங்களை கல்லூரியில் சேர்க்க இயலாமல் இருப்பதால் அப் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் . . . .

அறிக்கை.

தனியார் துறையில் சுயநிதி ஆதாரத்தின்கீழ் இயங்கும் பொறியியற் கல்லூரிகள் அரசாணை (பல்வகை) எண் 429 (கல்வித் துறை, நாள் 17—4—1984-ல் அரசு வகுத்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இயங்குகின்றன.

அதன்படி அக்கல்லூரி நிர்வாகத்தினர் அக்கல்லூரிக்கு அனுமதியளிக்கப்பட்ட மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையில் 50 சதவிதம் மாணவர்களை நிர்வாகத்தினரே விதிமுறைகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ளலாம். மீதம் உள்ள 50 சத விகிதத்துக்கான இடங்களை தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், ஒவ்வொரு ஆண்டும் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்காக தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர் பட்டியலிலிருந்து எடுத்து நிரப்புவார்.

இம்மாணவர்களிடத்தில், அரசு மற்றும் அரசு பொறியியற் கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு உண்டான கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணங்களே வசூலிக்க வேண்டும்

1987 ஏப்ரல் 21] [திரு. சி. பொன்னையன்]

என்றும், அதற்குமேல் எந்தவிதமான கேபிடேஷன் கட்டணமும் வசூலிக்கக்கூடாது என்றும் மேற்படி ஆணையில் நிபந்தனை எண் 13 மற்றும் 14-ல் அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் (Government Quota) நிரப்பப்பட்ட மாணவர்களிடமிருந்து வந்த ஒரு சில புகார்கள் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து குறைகள் தீர்க்கப்பட்டு விட்டன. ஆனால் நிர்வாகத்தினரால் நிரப்பப்பட்ட மாணவர்கள் சம்பந்தமாக புகார்கள் ஏதும் வரவில்லை.

தன் நிதி தொழில் நுட்பப் பயிலகங்கள்:

தன் நிதி தனியார் தொழில் நுட்பப் பயிலகங்கள் அரசு ஆணை (பல்வகை) எண் 2007, கல்வி அறிவியல் தொழில் நுட்பம், நாள் 18—10—1983-ல் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இயங்கி வருகின்றன.

மேற்படி அரசாணையில் உள்ள நிபந்தனை எண் 1-ன்படி தன் நிதி தொழில் நுட்பப் பயிலகங்களின் நிர்வாகிகள் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையில் 50 சதவிகிதம் அவர்கள் சேர்க்கை விதிமுறைகளுக்குட்பட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். மீதியிருக்கின்ற 50 சதவிகித மாணவர்களை அரசு மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் ஆகிய இவர்கள் வகுத்துள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப சேர்க்க வேண்டும். அத்துடன் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் தொழில் நுட்பப் பயிலகங்களில் படிக்கும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம் சிறப்புக் கட்டண அளவுக்கு மேல் வசூலிக்கப்படக்கூடாது என்று மேற்படி அரசாணையில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும் 'கேபிடேஷன்' கட்டணங்கள் ஏதும் வாங்கக்கூடாது என்கின்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வந்த ஒருசில புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து குறைகள் தீர்க்கப்பட்டன.

திரு. எஸ். இராசாராமன்: தலைவர் அவர்களே, தனியார் துறையிலே சுய நிதி ஆதாரத்தின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கிற பல கல்லூரிகள் அதிகமாக கேபிடேஷன் பீஸ் என்ற முறையில் பணத்தை வசூல் செய்து கொண்டு, 50 விழுக்காட்டிற்கு மேலே

[திரு. எஸ். இராசாராமன்] [1987 ஏப்ரல் 21

யும் மாணவர்களை கல்லூரிகளில் சேர்க்கிறார்கள். இதனால் பணம் படைத்த மாணவர்கள்தாம் அந்தக் கல்லூரிகளில் இடம் பெறுகிறார்கள். மதிப்பெண்கள் அதிகமாகப் பெற்ற சிலர் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். இதை அரசு அறியுமா? இந்த முறையை மாற்றி அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, 50 சதவிதம் தகுதி அடிப்படையில் சேர்க்க வேண்டும் என்று ஆணை இடப்பட்டிருக்கிறது. அரசுக்கு அவ்வப்போது தகவல்கள் வருகிறபோது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. சைதை சா. துரைசாமியின் கவன ஈர்ப்பு மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகிறது. அடுத்த கவன ஈர்ப்பு.

(ஈ) உதகமண்டலத்தில் திறந்த வெளியரங்கு கட்டும் பணி.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம் உதகையில் வெளி விளையாட்டு அரங்கம் கட்ட நிதி ஆதாரம் இருந்தும், அடிக்கல் நாட்ட தேதி குறிக்கப்பட்டும் பணி தொடங்கப்படாமையால் மக்களிடையேயும், விளையாட்டு வீரர்களிடையேயும் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உதகமண்டலத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு திறந்த வெளி அரங்கு ஒன்று அவசியம் என பொதுமக்களால் நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டு வருவதாகவும், இதற்கு ஒரு செயல்